In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 157/2021 | Prosecution witness P.W.12 |
| Name: Kanagaraj | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02-12-2024.

**(Accused 1 to 6 are present. )**

முதல் விசாரணை :-

நான் சுக்காம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 19.01.2019 ம் தேதி வடமதுரை காவல் நிலையத்திற்கு எங்கள் மீது உள்ள வழக்கு சம்மந்தமாக நானும், காளிதாசும் சென்றிருந்தோம். அப்போது வடமதுரை காவல் நிலைய ஆய்வாளர் எங்களை மந்தகுளத்துப்பட்டிக்கு கூட்டிச் சென்றார். போகும்போது இடையில் ஆய்வாளர் எங்களிடம் எதிரியை கைது செய்யப் போவதாக சொன்னார். அன்றைய தினம் மதியம் சுமார் 1.1/2, 2 மணியளவில் மாமரத்துப்பட்டிக்கு சென்று ஒரு களத்து வீட்டில் வைத்து முருகன் என்ற ஒரு பையனை கைது செய்தார்கள். கைது செய்து ஆய்வாளர் அவருடன் பேசிக்கொண்டிருந்தார். நான் தள்ளி நின்றேன். பின்னர் காவல் நிலையத்திற்கு கூட்டி வந்தும் விசாரித்தார்கள். அப்போது முருகன் சிவக்குமார் என்ற பையனை கத்தியால் குத்தியதாக கூறினார். பின்னர் வடமதுரை காவல் நிலையத்திலிருந்து சுமார் 25 கி.மீ. தூரத்தில் உள்ள மாமரத்தப்பட்டியில் உள்ள வெள்ளைச்சாமி என்பவரது வீட்டில் இருந்து ஒரு சட்டை மற்றும் ஒரு கத்தியை எடுத்து முருகன் கொடுத்தார். எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் போட்டுவிட்டு போய்விட்டோம். ஆஜர் எதிரிகளை முதலாவது எதிரியை சாட்சி அடையாளம் காட்டி அவர்தான் முருகன் எனக் கூறினார். என்னிடம் காண்பிக்கப்படும் சாபொ.2 சட்டை (ஏற்கனவே இறந்த நபர் அணிந்திருந்த சட்டை) மற்றும் சாபொ.1 கத்தியை அடையாளம் காட்டினார். என்னிடம்

காண்பிக்கப்படும் எதிரி முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். என்னுடன் காளிதாஸ் என்பவரும் கையெழுத்து செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.4. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த அத்தாட்சி அதசாஆ.5. பின்னர் நாங்கள் இருவரும் எங்கள் வீட்டுக்கு சென்றுவிட்டோம். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் 8ம் வகுப்பு வரை படித்து உள்ளேன். மேற்படி இரண்டு ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்களை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரிதான். சுக்காம்பட்டி கிராமத்தில் இருந்து மாமரத்துப்பட்டி சுமார் 25, 30 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். 19.01.2019ம் தேதி நான் காவல் நிலையத்திற்கு கண்டிசன் கையெழுத்து போட காளிதாசுடன் சென்று இருந்தேன். என் மீது என்ன வழக்கு என்றால் வேறு ஒருவர் நிலத்தை என் பேரில் பதிந்து கொண்டேன் என வழக்கு இருந்ததில் என்னை கைது செய்து பின்னர் பிணையில் வந்து கண்டிசன் கையெழுத்து போடச்சென்றேன். மாமரத்துப்பட்டிக்கு இதற்கு முன்னர் சென்று கிடையாது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து சுமார் 12.30 மணியளவில் கிளம்பினோம். மாமரத்துப்பட்டிக்கு போகும்போது மதியம் சுமார் 2.30, 2.45 மணிஇருக்கும். மாமரத்துப்பட்டி என்பது செங்குறிச்சியிலிருந்து 4, 5 கி.மீ. தூரத்தில் இருக்கும். செங்குறிச்சியிலிருந்து வலசைக்கு செல்லும் வழியில் 5.கி.மீ. தொலைவில் காட்டுக்குள் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்றோம். எதிரியை கைது செய்த இடமும், பொருட்களை கைப்பற்றிய இடமும் ஒரே இடம் என்றால் சரியல்ல. வெவ்வேறு இடம். எதிரியை கைது செய்த இடத்திலிருந்து செந்துரை வந்து செந்துரை பக்கத்தில் ஒரு மலைப்பக்கத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். செந்துரையிலிருந்து அந்த பகுதி ஒரு கி.மீ. தொலைவில் இருக்கும். கைது செய்த இடத்திற்கும், பொருட்களை கைப்பற்றிய இடம் வரை போலீஸ் ஜீப் போகும் என்றால் சரிதான். சட்டையை எதிரி போட்டிருந்ததை கழற்றிக்

கொடுத்தார் என்றால் இல்லை. ஓட்டு வீட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தார். எதிரி முருகன் நல்ல உடல்நிலையில் பேசும்நிலையில் அப்போது இருந்தார் என்றால் சரிதான். என் முன்னிலையில் எதிரியை கைது செய்யவில்லை என்றும் எந்த சான்றுப்பொருளையும் கைப்பற்றவும் இல்லை என்றால் சரியல்ல. 19.01.2019 ம் தேதி எதிரி நீதிமன்றக்காவலில் இருந்தார் என்றால் சரியல்ல. வடமதுரை காவல் நிலையத்தில் பல குற்ற வழக்குகள் என் மீது இருக்கிறது என்றும் அதனால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.12.02 17:35:14 +0530

Principal District Judge,
Dindigul.